தரைப் பந்தல், கதிரைகள், சில்வர் கப், பீங்கான் இன்னும் பல உபகரணங்களை வாடகைக்கு பெற நாடுங்கள்
"ஒளி இல்லம்"
210, பிரதான வீதி, (யாகப்பர் ஆலய மருங்கில்) யாழ்ப்பாணம்

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

For all Ceremonies
At your homes
Our Service available
OLI ILLAM
210, MAIN STREET,
(Near St. James Church)
JAFFNA.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 20 செவ்வாய்க்கிழமை (03 (5 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 156

## இலங்கையில் அவர்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லை!

# ஈழ தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பாதீர்!

# இந்திய, தமிழக அரசுகளிடம் கோரிக்கை

## அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் ஜெனிவாவிலிருந்து விண்ணப்பம்

கொழும்பு, மே 3

தமிழகத்தில் இருந்து திருப்பி அனுப்பப்படும் இலங்கைத் தமிழ் அகதிகளின் உயிருக்கு இலங்கையில் உத்தரவாதம் இல்லை என்பதால் அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் முயற்சியை உடனடியாக நிறுத்துங்கள்.

— இவ்வாறு தமிழக மாநில அரசையும் இந்திய மத்திய அரசையும் அகதிகளுக்கான ஐ; நா. தூதரகத்தின் ஜெனிவா தலைமையகம் கேட்டிருக்கிறது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் ஜெனிவா தலைமையக அதிகாரிகளும், கொழும்பு அலுவலக அதிகாரிகளும் இலங்கையின் வடக்கு - கிழக்கிற்குச் சென்று — அங்குள்ள — தமிழகத்திலிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட — அகதிகளின் நிலைமையை நேரில் கண்டறிந்தனர். அதன் பின்னரே மேற்படி கோரிக்கையை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் விடுத்திருக்கிறது.

கடந்த டிசம்பரில் தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட — குருநகரைச் சேர்ந்த — ஜேசப் அன்ரனி பிரான்ஸிஸ் (வயது 52) என்ற மீனவர் குருநகர் கடற்பகுதியில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்றும் —

தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட அகதிகளில் பல இளைஞர்கள் இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் —

இத்தகைய சம்பவங்கள் திருப்பி அனுப்பப்படும் அகதிகளின் உயிர்களுக்கு இலங்கையில் உத்தரவாதம் இல்லை என்பதையே காட்டுவதாகவும் —

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் இந்தியாவுக்குத் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் இருந்து திரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் பாதுகாப்புக்கு ஈழ அகதிகளால் அச்சுறுத்தல்!

### சட்டசபையில் தமிழகமுதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, மே 3

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளாலும் விரவாதிகளின் அனுதாபிகளாலும் தமிழகத்துக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அவர்களை மீண்டும் தாயகத்துக்குத் திருப்பி அனுப்பவேண்டும்.

— இவ்வாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

வேலூர் அகதிகள் சிறப்பு முகாமிலிருந்து நான்கு பேர் தப்பியோட முயற்சித்ததாகக் கூறப்படுவது குறித்து நேற்று தமிழக சட்டப் பேரவையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஞானசேகரன் கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றை கொண்டு வந்தார்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே தமிழக முதல்வர் மேற்கண்டவாறு கூறினார். (உ-க)

## ஈழஅகதிகளை நெதர்லாந்தும் திருப்பி அனுப்ப முயற்சி!

### இலங்கையுடன் ஒப்பந்தம் செய்வது குறித்துப் பேச்சு

அம்ஸ்ரடாம், மே 3

நெதர்லாந்தும் தனது நாட்டில் தங்கியுள்ள 15 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பாக இலங்கை அரசுடன் உடன்பாடு ஒன்றைக் காணும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கிறது.

நெதர்லாந்து வானொலி இத்தகவலை நேற்று வெளியிட்டது.

சுவிட்சர்லாந்து தனது நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பாக இலங்கை அரசுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டுள்ளது என்றும்—

இதன்படி இரு வருடங்களில் 11 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் திட்டத்தை சுவிஸ் அரசு செயற்படுத்த ஆரம்பித்துள்ளது என்றும் தெரிவித்த நெதர்லாந்து வானொலி, நெதர்லாந்தும் அந்த விதமான உடன்படிக்கை ஒன்றை கொழும்பு அரசுடன் செய்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்றும் — அறிவித்தது.

நெதர்லாந்து செய்யவுள்ள உடன்பாட்டின் படி தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இலங்கை அரசு எவ்வித பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கவுள்ளது என்பது பற்றி சொல்ல முடியாதிருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் அண்மையில் அமைதியாக உள்ளூராட்சித் தேர்தல் நடந்துள்ளது என்ற அடிப்படையிலும்—

முன்னர் இருந்ததிலும் பார்க்க தற்போது அங்கு நிலைவரம் முன்னேற்ற

( 4 ஆம் பக்கம் பார்க்க )

### இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும்

## அங்கிலிக்கன் ஆயரின் முயற்சி வெற்றியளிப்பதாக இல்லை!

இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காண்பது தொடர்பாக தாம் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லை என அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ யாழ்ப்பாணத்துக்கு அறிவித்துள்ளார்.

இரு தடவைகள் யாழ்ப்பாணம் வந்த ஆயர் இங்கு விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்திய பின்னர், கொழும்புதிரும்பி, அங்கு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண தொடர்ந்து முயற்சிகளை மேற் கொண்டிருந்தார் என்பது தெரிந்ததே.

அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது திருச் சபையினருக்கு தற்போது அனுப்பியுள்ள தகவலில்

தமது முயற்சி இன்னும் வெற்றியளிக்கவில்லை என்றும்—

என்றாலும் முயற்சியைக் கைவிடாமல் தாம்தொடர்ந்து செயற்பட்டு வருவதாகவும்— தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை தீர்வு குறித்து பேச புத்தபிக்குகளை அழைத்துக் கொண்டு விரைவில் யாழ்ப்பாணம் வருவேன் என்று கடந்த முறை இங்கு வந்த சமயம் ஆயர் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## இன்று கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 3

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-5)

## ஹெலி தாக்கு

வல்வெட்டித்துறை, மே 3

நேற்றுக்காலை 8 மணியளவில் பலாலி முகாம் பக்கமாக இருந்து வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று பாம்பிச், தொண்டைமானாறு பெரிய கடற்கரை ஆகிய பகுதிகளை வட்டமிட்டு கலிபர் தாக்குதல் நடத்தியது.

இதேவேளை —

பகல் 11.15 மணியளவில் பலாலி முகாமில் இருந்து அச்சுவேலிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

நண்பகல் 11-45 மணியளவில் ஸ்ரீலங்கா கடற்படையினர் மக்கள் குடியிருப்புகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்தினர். [த-155]

## மிகப்பெரிய புயல் பங்களாதேஷை தாக்கியது!

டாக்கா, மே 3

பங்களாதேஷின் சிட்டகொங் பிரதேசம் மற்றும் கரையோரப் பகுதிகளை மணித்தியாலத்துக்கு 250 கிலோ மீற்றர் வேகத்திலான சூறாவளி ஒன்று நேற்று மாலை தாக்கியது.

கடல் அலைகள் மூன்று முதல் ஆறு மீற்றர் உயரத்துக்கு எழும்பி கரையோரப் பகுதிகளை மூழ்கடித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும் உயிரிழப்பு ஏற்பட்டிருக்கும் என அஞ்சப்பட்டது ஆனால் அது பற்றிய விவரம் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

## வியாழனுக்கு முன் தபால்களை சேர்க்குக

யாழ்ப்பாணம், மே 3

நாளை மறுதினம் வியாழக்கிழமை பருத்தித்துறைக்கு வந்து திரும்பும் 'பிளம்பயான்' கப்பலில் வெளியூர்களுக்கான தபால்கள் அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன

எனவே வெளியூர் தபால்களை அனுப்ப விரும்புவோர் அவற்றை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு முன்னதாக யாழ். பிரதம தபாலகத்தில் சேர்க்குமாறு யாழ் பிரதம தபாலதிபர் கேட்டுள்ளார் (உ-162)

## ரயில்-வான் மோதல் மூன்று மாணவர் மற்றும் இருவர் பலி

அலவ்வைக்கு அருகில் அம்பேபுர ரயில் கடவையில் கடுகதி ரயில் ஒன்றுடன் பாடசாலை வான் ஒன்று நேற்று நண்பகல் அளவில் மோதியதில் 3 மாணவர்களுட்பட 5 பேர் மரணமானார்கள்.

ரயில் கடவைக்கு கதவு இருந்தும், அதை இயக்குபவர் சம்பவம் நடந்த சமயம் அந்த இடத்தில்இருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆறு பாடசாலை மாணவர்கள் படுகாயமடைந்து ... மருத்துவமனையில் ... (உ-எ)

### — ஸ்ரீலங்காவின் சரித்திர நிகழ்வாம்! —

## எதிரணி மேதின நிகழ்ச்சியில் 15லட்சத்துக்கும் அதிகமக்கள்!

### 11 மணி நேரம் பேரணி; அதிகாலை 5 மணிவரை கூட்டம்

ஸ்ரீலங்காவில் இதுவரை நடத்தப்பட்ட மேதின விழாக்களில் மிகப்பெரிய அளவில் அமைந்த விழாவை நேற்றுமுன்தினம் கொழும்பில் எதிர்க்கட்சிகள் ஒன்றாகக்கூடி நடத்திக் காட்டியதாக அறிவிக்கப்படுகிறது.

நாட்டின் பல பாகங்களிலிருந்து வந்த சுமார் 15 லட்சம் மக்கள், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டத்தில் பங்குபற்றியதாக அறிவிக்கப்படுகிறது.

15 லட்சத்துக்கும் அதிகமானோர் பங்குபற்றினர் என்பதை அரசின் மூத்த அமைச்சர் ஒருவர் கூட ஒப்புக் கொண்டதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணிக்கு கொழும்பு கிருலப்பனையில் ஆரம்பமான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேதின ஊர்வலம் பொரளை கம்பெல்பூங்காவைகடையாக வந்து சேர்ந்த போது நள்ளிரவு 11 மணியானது.

அதன் பின்னர் ஆரம்பமான மேதினக் கூட்டம் நேற்றுக் காலை 5 மணிக்கு முடிவுற்றது. (உ-எ-6)

## ஐ.தே. கவின் அரசாங்கத்தை தூக்கி வீசும் மேதினப் பேரணி

### சந்திரிகா விமர்சனம்

கொழும்பு, மே 3

பொது மக்கள் ஐக்கிய முன்னணி நடத்திய மிகப் பெரிய ஊர்வலம் ஐ.தே.க. அரசை தூக்கி வீசும் ஒன்றாகும்.''

— இவ்வாறு முன்னணியின் மே தினக் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

ஐ.தே.க. ஆட்சியில் அரச ஊழியர்களும் தொழிலாளர்களும் பலவித துன்பங்களை அனுபவித்து வருவதாகக் கூறிய அவர் —

ஐ.தே.கவின் கடந்த 17 ஆண்டு கால ஆட்சியில் அமைச்சர்கள் உதவி அமைச்சர்களின் சம்பளம் நூறு மடங்காக அதிகரித்த போதும் ஏழைத் தொழிலாளர்களின் ஊதியம் இரு மடங்கு கூட அதிகரிக்கவில்லை என்றார்.

''ஸ்ரீ. ல. சு. க. ஆட்சி செய்த போது 16 அமைச்சர்கள் மாத்திரமே இருந்தனர். ஆனால் இன்று 87 அமைச்சர்கள் உள்ளனர். இதனால் அரசுக்கு வீண் செலவு.

''எமது கட்சி ஆட்சிக்கு வந்ததும் தற்போதைய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும். அதன் மூலம் சகல மக்களும் சுதந்திரமாக வாழ வாய்ப்பு கிட்டும்''

— இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

## அசம்பாவிதம் ஏதும் இல்லை

''பத்து லட்சத்துக்கும் அதிக மக்கள் கலந்து கொண்ட எதிரணியினரின் — மே தின நிகழ்ச்சிகளில் - ஆரம்பத்திலிருந்து முடிவு வரை — எந்த வித அசம்பாவிதங்களும் இடம்பெறாதது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும்.''

— இவ்வாறு மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமைத்த பாதுகாப்பு வலையம் காரணமாக அசம்பாவிதங்கள் அனைத்தும் தவிர்க்கப்பட்டன என்று எம்.பியான ஜெபராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

எனினும் —

கம்பெல் பூங்காவில் மேதினத்தன்று இரவு இருள் சூழ்ந்த பின்னர் வீதியிலிருந்த சுமார் 80 விளக்குகள் அணைக்கப்பட்டன என்றும் —

இது அரசின் திட்டமிட்ட நடவடிக்கை என்றும் அவர் சொன்னார். (உ-6)

## மூதூரில் புலிகள் தாக்குதல்! இரு பொலீஸார் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 3

திருகோணமலை மாவட்டத்தில் பொலிஸ் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நடத்திய திடீர் தாக்குதலில் இரண்டு பொலீஸார் கொல்லப்பட்டனர். பல இராணுவ தளபாடங்கள் கைப்பற்றப்பட்டன.

மூதூர் மாவத்தோப்பூருக்கும் தோப்பூருக்கும் இடையில் உள்ள தோப்பூர் பாலத்தில் அமைக்கப்பட்ட காவலரண் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

பொலிஸாரிடமிருந்து — ரி 56-1 ரக துப்பாக்கிகள் — 3, தொலைத்தொடர்பு சாதனம் — 1, ரி 56 ரக துப்பாக்கி ரவைக் கூடுகள் — 15, ஏ கே. ரவைக் கூடுகள் தாங்கி — 4, நடுத்தர ரவைகள் — 418, மழைக் கவசங்கள் — 6 ஆகியவை விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை. [த]

### முச்சந்தி முரளி



காமினி என்ட பெயரிலை உவர் டி.பிக்கு நல்ல பிடிப்புப் போலை......!

## ஐ. தே. க. செயலாளர் காமினி விஜேசேகரா?

கொழும்பு, மே 3

ஐ. தே கவின் பொதுச் செயலாளர்பதவியிலிருந்துசிறிசேன கூரே இராஜினாமாச் செய்திருப்பதை அடுத்து —

அப்பதவிக்கு கலாநிதி காமினி விஜேசேகரா நியமிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பதவிக்கு பலரின் பெயர்கள் அடிபட்ட போதிலும் யாரும் எதிர்பாராத வகையில் ஜனாதிபதி விஜேதுங்க இப்பதவிக்கு கலாநிதி விஜேசேகராவை தெரிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கலாநிதி விஜேசேகராவிடம் கேட்டபோது—

''ஐ. தே. க. செயலாளர் பதவியை ஏற்கும்படி ஜனாதிபதி என்னைக் கேட்டுள்ளார். உத்தியோகபூர்வ கடிதத்தை எதிர்பார்க்கிறேன்'' — என்று பதிலளித்தார்.

குமன் சேனாநாயக்காவின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட எக்ஸத் ஜாதிக பெரமுன (ஈ. ஜே. எல். பி.) கட்சியின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நரோமா சேவை இன்று நடக்கும்

யாழ்ப்பாணம், மே 3

உணவு முத்திரை மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் நேற்று மாலை ''சோமாரி'' கப்பல் காங்கேசன்துறையை வந்தடைந்தது.

இன்று காலை காங்கேசன் துறையை வந்தடையும் ''நரோமா'' கப்பலில் வருகின்ற பயணிகளை அங்கிருந்து பருத்தித்துறைக்கு 'சோமாரி' கப்பல் ஏற்றிவரும்.

[4ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### அக்கரைச்சீமையில்

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாவல் அக்கரைச் சீமையில் 50/-. ஆசிரியரது 45 வருட கால எழுத்துலக அனுபவம் நாவலில் மிளிர்கின்றது. சுவையான சமகாலக் கதை. [30691]

### ஆனந்தம் அம்மாமி

தரமான சுவையான அப்பளம் கிடைக்கவில்லையா? கவலையை விடுங்கள். உங்கள் உணவிற்கு மெருகூட்டுகிறது. சுத்தமான உழுந்து மாவில் தயாரிக்கப்பெற்ற ஆனந்தம் அம்மாமி அப்பளம் தனித்துவமான சுவை, அளவில் தயாரிக்கப்பட்டது. கிடைக்கும் இடங்கள் விக்னேஸ்வரா, விநாயகர், சின்னத்தம்பி சாவகச்சேரி, இராஜேஸ்வரி கொடிகாமம், அன்சரன், பவானி, நீர்வேலி குகன், அம்பிகை யாழ்ப்பாணம். (7863)

## ஆண்டு நிறைவு விழா

வட்டுக்கோட்டை, மே 3

யாழ்ப்பாணக் கல்லூரியை. எம். சி. ஏயின் 110 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த மாதம் 25ஆம் திகதி கொண்டாடப்பட்டது. (ச-161)

## கணித பாட செயலமர்வு

வடமராட்சி, மே 3

கடந்த முறை நடைபெற்ற ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையாத வடமராட்சிப் பகுதி மாணவர்களுக்கான புதிய விசேட கணித பாட செயலமர்வு வகுப்பு கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் இம்மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகிறது. (ச-178)

## மண்ணெண்ணெய் விநியோகம்

தென்மராட்சி, மே 3

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்களுக்கு பளை ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் பங்கீட்டு அட்டைக்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் இன்று முதல் வழங்கப்படவுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார். (ஒ-117)

## சோமாஸ்கந்தர் திருவுருவ ஊர்வலம்

வலிகாமம் தெற்கு, மே 3

சுன்னாகம் கதிரமலை சிவன் கோயிலில் ஸ்ரீ சோமாஸ்கந்த மூர்த்தி நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் அண்மையில் நடந்தேறியது.

கும்பாபிஷேக நிகழ்வில் பண்டிதர் க. உமாமகேஸ்வரன், திருமதி தி. மங்கையர்க்கரசி, ஆலய சிவாச்சாரியார் சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

யாழ்ப்பாணம் 'சிற்ப ரத்னா'' சி. சின்னராசாவினால் வடிவமைக்கப்பட்ட சோமாஸ்கந்தர் திருவுருவம் ஊர்வலமாக கதிரமலை சிவன் கோயிலுக்கு எடுத்து வரப்பட்டது. இத்திருவுருவத்தை சுன்னாகம் இ. சதாசிவம் குடும்பத்தினர் உபயம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-152)

## அங்கவீனர் போட்டி

தென்மராட்சி, மே 3

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினர் செஞ்சிலுவைச் சங்கத்தை உருவாக்கிய ஜீன் ஹென்றி டுனான்டின் தினத்தை யொட்டி, யாழ். மாவட்டத்திலுள்ள அங்கவீனர்களுக்கு இடையிலான போட்டிகளை இம்மாதம் 8ஆம் திகதி நடத்தவுள்ளனர்.

கண்பார்வையற்றவர்களுக்கு கவிதை எழுதுதல் போட்டி, வாய் பேச முடியாதவர்களுக்கு சித்திரம் வரைதல் போட்டியும், கால்கள் வழங்காதவர்களுக்கு முச்சக்கரவண்டி ஓட்டப் போட்டியும் நடைபெறும். (க-117)

## வணிக நெறி இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 3

பளாலி ஆசிரிய கலாசாலையில் 1993 ஆம் ஆண்டு இறுதிப்பரீட்சைக்குத் தோற்றிய வணிக நெறி மாணவர்கள் இறுதிப்பரீட்சை தொடர்பாகக் கலாசாலை அதிபரை உடனடியாகச் சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஒ)

---

## G. A. Q. Ist in Com

யாழ். பல்கலைக்கழகம்

(வெளிவாரி)

இதற்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டு உள்ளது.

இதற்கான விரிவுரைகள் ஆரம்பம்: **07-05-94**

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

விவரங்களுக்கு:

எஸ். அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-8045)

---

## நன்றி நவிலல்

### அம்பலவாணபிள்ளை வைத்தியலிங்கம்

(டாக்டர்)

(பாலாவோடை - காரைநகர்)

சென்ற 26-04-1994இல் சென்னையில் காலமான காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்திய கலாநிதி அம்பலவாணபிள்ளை வைத்தியலிங்கம் அவர்களின் மரணச் செய்தியை திரு S. S இராசரத்தினம் (98, விவேகானந்த மேடு கொழும்பு - 13) அவர்கள் 27-04-1994 அன்று வானொலி மூலம் அறியத் தந்ததைத் தொடர்ந்து எமது இல்லத்திற்கு வருகை தந்து எங்களுடன் துக்கத்தில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஏ எஸ். சங்கரப்பிள்ளை

குடும்பத்தினர்.

இல 4, செட்டித்தெரு,

நல்லூர்.

[30705]

---

## 31 ஆம் நாள் நினைவு தினம்



| மலர்வு: | உதிர்வு: |
| --- | --- |
| 23 | 03 |
| 03 | 04 |
| 1922 | 1994 |

அமரர்

### முருகேசு செல்லையா சுப்பிரமணியம்

(முன்னைநாள் முருகேசு உரிமையாளர் மாகோ)

03-05-94இல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றுமப்படி உற்றார், உறவினர் அனைவரையும் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்.

பாணாவித் தெரு,

பொலிகண்டி,

(30628)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 08 | 13 |
| 08 | 05 |
| 1939 | 1993 |

### அமரர் இராசதுரை சடாட்சரம்

(உரிமையாளர்: வீனஸ் தங்க மாளிகை)

திதி: 03-05-1994

அன்பு கொண்டென்மை அணைத்து வளர்த்த அப்பா! உங்கள் அன்பு மொழி கேட்டு ஆண்டொன்றானதோ? - என்றென்றும் உங்கள் நினைவுதான் உள்ளமெல்லாம் நிறைந்திருந்து எங்களை வாழவைக்கும் ஈங்கு.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,

பேரப்பிள்ளைகள்

நீர்வேலி வடக்கு,

நீர்வேலி.

வீனஸ் நகைப் பூங்கா,

185, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(30688)

---

உ

## இணுவில்-கோண்டாவில்-மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

## திருக்கல்யாண உற்சவம்

இன்று (**03-05-94**) செவ்வாய்க்கிழமை

காலை 9மணி எம்பெருமானுக்கு விஷேட அபிஷேக ஆராதனை இடம்பெறும்

மாலை 5மணி விஷேட பூசை

மாலை 5-30மணி திருக்கல்யாண வைபவம் ஆரம்பம்

மங்கள இசை

திரு. இரத்தினம் சின்னராசா குழுவினர்

திரு. இ. சுந்தரமூர்த்தி குழுவினர்

திரு. இ. புண்ணியமூர்த்தி குழுவினர்

திரு. தெ. உதயசங்கர் குழுவினர்

திரு. கே. உதயநாதன் குழுவினர்

திரு. கே. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினர்

திரு. என். கே. பத்மநாதன் குழுவினர்

திரு. என். ஆர். சின்னராசா புதல்வர்கள் குழுவினர்

திரு. கே. வித்தியானந்தம் குழுவினர்

இரவு 7-30 மணி சுவாமி திருவீதி உலா

இரவு 9-30 மணி

இன்னிசைக் கச்சேரி

சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கம் — பாட்டு

இசைஞானதிலகம் உ. இராதாகிருஷ்ணன் — வயலின்

திரு. எஸ். மகேந்திரம் — மிருதங்கம்

திரு. வீ. தபோதநாயகம் — கடம்

திரு. எஸ். ராஜு — முகர்சிங்

- முருகன் அடியார்கள்,

(சி-7987)

---

காரைநகர் - பாலாவோடை தந்த தவப் புதல்வன்

(26-04-1994 ஆம் திகதி இந்தியாவில் தமிழ்நாட்டில் அமரத்துவம் அடைந்த)

### வைத்திய கலாநிதி அ. வைத்தியலிங்கம்

அவர்களின் மறைவை ஒட்டிய

## கண்ணீர் அஞ்சலி

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
வரலாற்றில் இடம் பிடித்த நாயகன் நீ
உய்திடும் பணித வாழ்வை வைத்தியத்தால்
உயர்த்திடும் உத்தமன் நீ

பயவே பகன்றிடும் மொழியாலே
பாதி நோய் தீர்ந்து போகுமையா - இன்று
வையமே உன்னை இழந்ததனால்
வாடிப் போய் நிற்குதையா.

தோழமை அன்பு பூண்டொழுகினாய்
ஆளுமை மிக்க எங்கள் நண்பனே!
நாளுமை நேசித்து வாழ்ந்ததனால் -இன்று
நலிந்து போய் வாழ்கின்றோம் உன்னை-
இழந்ததனால்.

உன்பிரிவால் துயருறும்,

நண்பர்கள்

செ. மாணிக்கவாசகர் குடும்பம்,

மா. ஐயானந்தன் குடும்பம்.

வரணி

கொடிகாமம்.

(30709)

---

## முதலாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



| மண்ணில்: | விண்ணில்: |
| --- | --- |
| 10 | 14 |
| 06 | 05 |
| 1967 | 1993 |

### செல்வன் குலசிங்கம் சிவகுமார்

(அமைச்சர்)

(யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன்)

திதி: 03-05-1994

அன்பிற்கோர் அணையா விளக்காய் - உதித்த
ஆருயிர்ச் செல்வமே! சிவா!
மன்றாடி வேண்டி நின்றோம்
அசைந்து விட்டான் கால தேவன்
சாவுக்குள் சங்கமித்துப் போனாலும் - சாகாமல்
எங்களுக்குள் எப்பொழுதும் இருக்கின்றாய்
சிறந்து வாழ்ந்து காட்டிய - அமைச்சரே!
மூத்த விநாயகர் நிழல் பதம்
அடைக்கலம் அடைந்ததேனோ?

பிரிவால் நினைந்துருகும்;

குடும்பத்தினர்.

குருக்கள் பகுதி,

சரணவாய் மேற்கு,

(30708)

---

இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட

# சேத விவரங்களை கோருகிறது அமைச்சு

யாழ்ப்பாணம், மே 3

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட சேத விவரங்களை மதிப்பீடு செய்து உடனடியாக அனுப்பி வைக்குமாறு புனர்வாழ்வு அமைச்சு யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் கேட்டுள்ளது.

இதனையடுத்து யாழ். பிரதேச செயலாளர் பகுதியில் ஏற்பட்ட சேத விபரங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

இந்த சேத விவரங்கள் அடங்கிய பட்டியலை யாழ் பிரதேச செயலகம் புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளது. (த-17)

---

## தேவை

J.C.C. வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையத்திற்கு அநுபவமுள்ள (தகுதியுள்ளவர்கள்)

✱ வரவேற்பாளர்கள், ✱ தாதிமார், ✱ மருந்துக்கலவையாளர்

04 05-1994 காலை 9 மணி

✱ நேர்முகமாகத் தங்கள் சான்றிதழ்களுடன் சந்திக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

**J.C.C. வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்**

514/14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[30710]

---

விற்பனையாகிறது!

**புதினம் -** முதல் இதழ்

**அறிவுக்களஞ்சியம் - 22**

(சி-8069)

---

## அமைய சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவிக்கான வெற்றிடம்

(சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் / கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள சுகாதார நிறுவனங்களில் சேவை செய்வதற்காக அமைய சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் பின்வரும் தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

1. 18 — 40 வயதிற்குட்பட்ட எட்டாம் வகுப்பு (ஆண்டு 9) சித்தியடைந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
2. தமது பிரிவிற்குரிய பிரதேச செயலாளர் / உ. அ. அதிபர் பிரிவில் கடந்த மூன்று ஆண்டுகளிற்கு குறையாமல் வசித்து இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரிகள் பின்னர் அறிவிக்கப்படும் திகதியொன்றில் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கும் செயல்முறைப் பரீட்சையொன்றிற்கும் தோன்ற வேண்டும்.
4. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதி: 20-05-94 வெள்ளிக்கிழமை.
5. சம்பளம் நாளாந்த அடிப்படையில் நாளொன்றிற்கு 63/- ரூபாவும், வாழ்க்கைச் செலவுப்படியும் சேர்த்து வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்தில் தயாரிக்கப்பட்டு 20-05-94 திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக (நேரிலோ அல்லது தபால் மூலமோ) அனுப்புதல் வேண்டும்.

வைத்தியகலாநிதி என். விவேகானந்தன்,

பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்,

சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்,

(சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் யாழ்ப்பாணம்)

சுகாதார சேவைகள் —

மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை,

விக்டோரியா வீதி,

யாழ்ப்பாணம்.

02-05-94.

### அமைய சுத்திகரிப்புத் தொழிலாளி பதவிக்கான விண்ணப்பம் - 1994

01. முழுப்பெயர்:
02. தபால் விலாசம்:
03. (அ) பிரதேச செயலாளர் / உ. அ. அதிபர் பிரிவு:
    (ஆ) கிராமசேவையாளர் பிரிவும் இலக்கமும்:
04. பால்:
05. (அ) விவாகமானவரா / விவாகமாகாதவரா:-
    (ஆ) பிள்ளைகளின் எண்ணிக்கை:-
06. (அ) இலங்கைப் பிரசையா:-
    (ஆ) வம்சாவழியாகவா / பதிவு மூலமாகவா:-
07. (அ) பிறந்ததிகதி:- (ஆ) தற்போதைய வயது:-
08. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
09. கல்வித் தகைமைகள்:
10. தற்போதைய வன்முறையால் பாதிக்கப்பட்டவராயின் அதன் விவரம்:
11. ஜனசவிய அல்லது உணவு முத்திரைக்கு உரித்தானவராயின் அதன் விவரம்:
12. தொண்டர் சேவையில் இருந்தால் அதன் விவரம்:-
13. பிற அனுபவங்கள்:-

மேற்குறிப்பிடப்பட்ட விவரங்கள் யாவும் சரியென நான் உறுதிசெய்கிறேன்.

திகதி: விண்ணப்பதாரரின் கையொப்பம்.

(சி/7988)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/3, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## பிரச்சினையை தீர்க்கத் தகுதி

அரசியல் சுதந்திரம்பெற்று, தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் வகையில், தமது அலுவல்களைத் தாமே செய்து, தமது முன்னேற்றத்துக்குத் தாமே உழைக்கும் மக்கள் மே நாளைக் கொண்டாடுவது ஒரு வகை.

சுதந்திர மனிதர்கள் என்ற வகையில் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள், வசதிகளை வழங்கக் கோரி, வலியுறுத்தி மே நாளைக் கொண்டாடுவதே பொதுவான வழக்கம்.

அரசியல் சுதந்திரம் பெறாத, அந்நியனால் அல்லது அடுத்தவனால் அடக்கி ஒடுக்கப்படும் மக்கள், தங்கள் சுதந்திரத்துக்காகப் போராடும் மக்கள் கொண்டாடும் மே நாள் வேறு வகையானது. சம்பந்தப்பட்ட மக்கள் — அவர்கள் வாழும் நாடு — சுதந்திரம் பெற்றால் மட்டுமே, சுதந்திரத்தின் பின்னரே, தொழிலாளர்களுக்குரிய உரிமைகள் கிடைக்க வழி பிறக்கும்.

ஆதனால், சுதந்திரத்துக்காகப் போராடும் மக்களிடையே வாழும் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காக மட்டுமன்றி, எல்லா மக்களின்—உரிமைக்காகவும்—சுதந்திரத்துக்காகவும்—போராட வேண்டிய தேவை உண்டாகிறது.

அந்த வகையிலேயே தமிழ்ப் பகுதியில் கடந்த நான்கு வருடங்களாக மே நாள் விழாக்கள் நடைபெற்று வருகின்றன. மே நாள் விழாக்கள் ஈழத்தமிழ் மக்களின் சுதந்திர வேட்கையையும், அதனைப் பெறுவது என்ற மன உறுதியையும், உணர்வையும் வெளி உலகத்துக்கு எடுத்துக் கூறுவதாக அமைந்து வருகின்றன.

தமிழ் மக்கள் எல்லோரும் ஒரே அணியில் நின்று மே நாள் கொண்டாடுவது, சுதந்திரத்தைப் பெறுவதில் அவர்கள் ஒற்றுமையாக நிற்கிறார்கள் என்பதைத் தென்னிலங்கை மக்களுக்கும் உலக மக்களுக்கும் எடுத்துக் கூறுவதாக அமைகிறது.

குறிப்பாகத் தென்னிலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளுக்கு வடக்கிலும், வன்னிப் பகுதியிலும் நடக்கும் மே தின விழாக்கள் மூலம் முக்கியமான செய்தி ஒன்று கூறப்படுவதை நோக்க வேண்டும்.

அதிகாரப் பரவல், நிர்வாகப் பரவல் என்ற சொற்தொடர்களைப் பயன்படுத்தி தீர்வுகள், திட்டங்களை முன்வைப்பதன் மூலம், தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதே அந்த முக்கியமான செய்தியாகும். தமிழர்கள் சுதந்திரத்துக்காகப் போராடும் போது இச் சில்லறைகளை — சிறிய தீர்வுகளை—முன் வைத்தால் அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பது அந்தச் செய்தியின் அர்த்தமாகும்.

தமது விடுதலைக்காக எழுச்சியுடன் போராடி வரும் தமிழர்கள், அது விடயத்தில் ஒரே அணியில் திரண்டு நிற்கும் தமிழர்கள், தமக்கென ஓர் அரசம், நாடும் உருவாகும் வரை ஓயமாட்டார்கள். அதற்கு முன்னர் ஓர் இடைக்காலத் தீர்வை ஏற்பது, இடைவழியில் தங்கு மடத்தில் தஞ்சம் அடைவதை ஒத்ததாகும். அந்தத் தங்கு மடம் — இடைக்காலத் தீர்வு — கூட உண்மையான சுதந்திரத்துக்கு ஊற்றுக் கண்ணாக அமைந்தால் மட்டுமே அதனைப் பரிசீலிக்க முடியும்.

தமிழர்களைப் பொறுத்த வரையில் அவர்களின் சுதந்திரம் என்பது, தமது பதவிக்காலத்துக்கு உட்பட்டது என்று விஜேதுங்காவோ, சந்திரிகாவோ நினைக்கக் கூடாது. தங்கள் பதவிக்காலத்தில் ஏதோ ஒரு விதமாகத் தீர்த்துச் சமாளிக்கலாம் என்றும் எண்ணிவிடலாகாது. சுதந்திரம் என்பது இன்றைய தமிழ்ச் சந்ததியின் வாழ்வுப் பிரச்சினை மட்டும் அல்ல. இன்னும் பல சந்ததிகளின் வாழ்வுப் பிரச்சினை.

ஆகையால் தமிழர் பிரச்சினை மேலோட்டமான இடைக்காலத் தீர்வுகளால் முடிவுக்குக்கொண்டுவர இயலாது என்பதனைப் புரிந்து கொண்டு கருமமாற்ற சிங்களத் தலைவர்கள் முன்வர வேண்டும். தமிழீழத்தில் நடந்துவரும் மே தின விழாக்கள் ஊடாக இந்தப் பின்புலத்தை பார்க்க முடிந்தால் மட்டுமே சிங்களத் தலைவர்கள் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கத் தகுதி பெறுவர்!

---

காஸா மற்றும் ஜெரிக்கோ பகுதிகளில்

# பலஸ்தீன மக்களுக்கு சுயாட்சி வழங்கும் உடன்படிக்கை நாளை கைச்சாத்து!

## இஸ்ரேல் ராணுவம் வெளியேறும்; 5ஆயிரம் கைதிகளுக்கு விடுதலை

கெய்ரோ, மே 3

கைப்பற்றப்பட்ட காஸா மற்றும் ஜெரிக்கோ பகுதிகளில் பலஸ்தீனிய சுயாட்சியை ஏற்படுத்தும் உடன்படிக்கையில் — நீண்ட காலத் தாமதத்தின் பின்னர் — நாளை (மே 4) இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் கைச்சாத்திடவுள்ளன.

எகிப்து தலைநகர் கெய்ரோவில் நடந்த பேச்சுவார்த்தைகளின்போது, உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கான புதிய திகதி நிர்ணயிக்கப்பட்டது.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட மறுநாள் முதல் காஸா மற்றும் ஜெரிக்கோ பகுதிகளில் இருந்து இஸ்ரேலிய இராணுவம் வெளியேற ஆரம்பிக்கும் என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு இறுதியில் வாஷிங்டனில் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே கைச்சாத்தான சமாதான ஒப்பந்தம் அமுல் நடத்தப்படுவது பூரணமாக நிறைவேற்றப்பட்டு விடும் என்று அறிவிக்கப்படுகிறது.

வாஷிங்டன் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, அதனை அமுல் நடத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இருதரப்பினருக்கும் இடையே ஐந்து மாதங்களாக நடைபெற்றன. பின்னர் இடம்பெற்ற ஹெப்ரோன் மசூதி படுகொலையைத் தொடர்ந்து பேச்சுக்கள் தடைப்பட்டிருந்தன.

அமெரிக்காவின் தீவிர முயற்சியைத் தொடர்ந்து மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமாகின்றன. இப்போது வாஷிங்டன் ஒப்பந்தத்தை பூரணமாக நிறைவேற்றுவதில் இரு தரப்பினரும் உடன்பாடு கண்டுள்ளனர்.

இஸ்ரேலிய அரசினால் சிறைவைக்கப்பட்டுள்ள 2 ஆயிரத்து 500 பலஸ்தீனிய கைதிகள், புதிய உடன்படிக்கை கைச்சாத்தான நாளில் இருந்து அடுத்துவரும் இரண்டு தினங்களில் விடுதலை செய்யப்படுவர் என்றும்—

மேலும் 2 ஆயிரத்து 500 பலஸ்தீனிய கைதிகள் அடுத்த இரண்டு வாரங்களில் விடுவிக்கப்படுவார்கள் என்றும் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் ஷிமோன் பெரஸ் தெரிவித்தார். (ஒ-எ)

## காஸாவுக்குப் பிரியாவிடை

கெய்ரோ, மே 3

''காஸாவுக்குப் பிரியாவிடை கூறுகின்றேன், இஸ்ரேலில் சமாதானம் உண்டாகட்டும்''—

இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் ஷிமோன்பெரெஸ், காஸாமற்றும் ஜெரிக்கோ பகுதிகளுக்கு சுயாட்சி வழங்குவதற்கான திகதியை நிர்ணயிக்கும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் முன்கண்டவாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

''எம்மைப்பொறுத்தவரையில் நீண்டதொரு பாதையின் முடிவுக்கு வந்துவிட்டோம். அதேவேளை பலஸ்தீனிய மக்களுடன் புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பிக்கின்றோம்; மத்திய கிழக்கு அமைதி நோக்கி இன்னொரு படி முன்னேறியுள்ளோம்''— என்றும் திரு. பெரெஸ் தெரிவித்தார்.

''நாம் காஸாவை விட்டு வெளியேறியவுடன் ஆயிரக்கணக்கான தாய்மாரும் இராணுவத் தொண்டர்களும் நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள் என்பதை நான் அறிவேன்'' என்றும் இஸ்ரேலிய அமைச்சர் தெரிவித்தார்.

சமாதானத்துக்கான பாதை திறக்கப்பட்டு விட்டது. பலஸ்தீனிய மக்கள் அதன் பலனை உடனடியாகக் காண்பர்''— என்று பலஸ்தீன் விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் தெரிவித்தார். (ஒ-எ)

பயங்கரவாதம் எனக்கூறுவது அவமானம்

# இனப்பிரச்சினைக்கு எமது ஆட்சி தீர்வு காணும்

## பொத்துவிலில் சு.க.எம்.பி தகவல்

இனப்பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினை என்று கூறுவது அவமானம். இந்த பிரச்சினையை எமது ஆட்சி தீர்த்து வைக்கும். அதற்கான திட்டமும் எம்மிடம் உண்டு.

இப்படிக் கூறுகிறார் அம்பாறை மாவட்டத்தின் சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பி. கே. ஆர். தேவாரப்பெரும.

பொத்துவிலில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

இனப்பிரச்சினையை துப்பாக்கிக் கலாசாரமாக மாற்றியது இந்த அரசாங்கமே. பண்டா — செல்வா ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இந்த நிலைமை இன்று ஏற்பட்டிராது — என்றும் அவர் கூறினார். (ஒ-3)

# தொழில் திறன் அபிவிருத்தி பயிற்சி நெறி 16இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 3

யாழ்ப்பாணம் வலயம் இரண்டில் உள்ள பின்வரும் பாடசாலைகளில் முறைசாராக் கல்வி — வளர்ந்தோர் கல்விப் பிரிவின் சுயதொழிலுக்கான தொழில்திறன் அபிவிருத்திப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ் கல்வி வலயம் 2 கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அறிவித்துள்ளார்.

ஆங்கிலத் தட்டச்சு, சுருக்கெழுத்து; சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் கல்லூரி.

தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து; புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் கல்லூரி.

உடையலங்காரத்தல்; வட்டு இந்துக் கல்லூரி, மல்லாகம் ம. வி., இணுவில் இந்துக் கல்லூரி, தேவரயாளி இந்துக் கல்லூரி.

ஹோட்டல் பயிற்சி; இராமநாதன் கல்லூரி, அச்சுவேலி புனித திரேசா ம. வி.,

விவசாய விஞ்ஞானம்; இராமநாதன் கல்லூரி.

வானொலி திருத்தல்; கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, சிதம்பராக் கல்லூரி.

கற்பித்தல் உபகரணம் தயாரித்தல்; தேவரயாளி இந்துக் கல்லூரி

இப்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் அவ்வப்பாடசாலை அதிபருக்கு எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். பயிற்சி நெறிகள் 16ஆம் திகதி ஆரம்பமாகும். (த)

# புதிய சமுதாய அமைப்பு முறை கூட்டுறவு மூலம் வர வேண்டும்

## சஞ்சிகை வெளியீட்டில் உரை

யாழ்ப்பாணம், மே. 3

அனைத்து ஒடுக்குமுறைகளையும் தடைகளையும் உடைத்து எறியக்கூடியதாக புதிய சமுதாய அமைப்பு முறை ஒன்று கூட்டுறவு மூலம் இங்கு உருவாக வேண்டும்.

இவ்வாறு யாழ் மாவட்ட தொழிற்சங்கப்பிரதிநிதி திரு. இமையவன், யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையினால் வெளியிடப்படும் 'ஐக்கிய தீபம்' சஞ்சிகையின் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

மனிதனின் கூட்டு முயற்சி பொருளாதாரத்தில் மட்டும் தங்கி நில்லாது போராட்டங்களிலும் விளங்க வேண்டும். இன்றைய போராட்ட சூழ்நிலையில் மக்களுக்கு வெளிப்படுத்தக் கூடிய வகையில் நல்ல கருத்துக்களை இச் சஞ்சிகை மூலம் பரிமாறிக் கொள்ள வேண்டும். புதிய பல வடிவங்களைப் படைக்கக் கூடியவகையில் இச் சஞ்சிகை பிரசுரமாக வேண்டும் என்றும் திரு இமையவன் கேட்டுக் கொண்டார்.

கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு வை. செந்திநாதன் தனது தலைமையுரையில் — 1945 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய தீபம் சஞ்சிகை 1987 இல் நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக தொடர்ந்து வெளியிடப்பட முடியாத நிலை ஏற்பட்டது என்றும் கூட்டுறவாளர்களின் முயற்சியினால் இப்போது மீண்டும் வெளிவர ஆரம்பித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

சஞ்சிகையின் முதலாவது பிரதியை திரு. இமையவன் பெற்றுக் கொண்டார். தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளரும் கூட்டுறவாளருமான திரு. எஸ். சத்தியமூர்த்தி ஆய்வுரை நிகழ்த்தினார்.

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான திருவாளர்கள் வே. முருகையா, எம். கனகசபை, கூட்டுறவுக் கல்லூரி அதிபரும் பதில் செயலாளருமான திரு. பொ. சண்முகசுந்தரம், கல்வி உத்தியோகத்தர் திரு சிவராஜசிங்கம் ஆகியோரும் பேசினார்கள். [illegible] (த-எ-162)

89 தென்பகுதி கலவரத்தின் போது

# சிங்கள இளைஞரை கொன்ற 4 ராணுவத்தினர் மீது வழக்கு

கொழும்பு, மே 3

1989 தென்பகுதி கலவரத்தின் போது பண்டாரகமையில் 28 வயது சிங்கள இளைஞர் ஒருவரைச் சுட்டுக் கொலை செய்ததாக இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மூன்று கோப்ரல்கள், ஒரு சார்ஜண்ட் ஆகியோர் மீது இரகசியப் பொலீஸ் திணைக்களத்தினர் குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

ஹொரணை நீதிவான் திருமதி சிலானி கருணாரத்தினா முன்னிலையில் இக்குற்றப்பத்திரிகைகள் கடந்த வாரம் தாக்கல் செய்யப்பட்டன

சம்பவ தினமான 15-07-89 அன்று நள்ளிரவு சந்தேக நபர்கள் சிலர் பொலீஸாருடன் இறந்தவரின் வீட்டுக்குச் சென்று இறந்தவரான சுனில் காரியப்பெருமாவையும் அவரது சகோதரர் பியசேகரா காரியப்பெருமாவையும் அவர்களின் கண்களைக் கட்டிவிட்டு [illegible] டல்பிற்றியாவில் உள்ள பொல்கொட ஆற்றங்கரைக்கு கூட்டிச் சென்றதாகவும்—

பின்னர் சந்தேக நபர்களில் ஒருவர் சுனிலைச் சுட்டுக் கொன்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மற்றச் சகோதரர் பியசேகரா, அந்த இடத்தில் இருந்து ஆற்றில் குதித்துத் தப்பி ஓடிச்சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# சீமெந்து தொழிற்சாலையை மூடாமல் தடுக்க முயற்சிப்பேன்

## யாழ். அரச அதிபர் உறுதி

யாழ்ப்பாணம், மே 3

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை மூடப்படுவதைத் தடுப்பதற்கு தம்மாலான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ளப்போவதாக யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் உறுதியளித்திருக்கிறார்

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் 1992ஆம் ஆண்டுடன் 25வருடகால சேவையைப் பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் சின்னம் செதுக்கிய தங்கப் பதக்கங்களை வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசியபோது அரச அதிபர் இந்த உறுதி மொழியை வழங்கினார்.

இப்பாரிய தொழிற்சாலை மூடப்பட்டால் வடபகுதியில் அது பாரிய பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

25 வருடகால சேவையைப் பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு அரச அதிபர் தங்கப் பதக்கங்களை வழங்கிக் கௌரவித்தார். தொழிற்சாலை ஆளணி முகாமையாளரால் அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டன. தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அவ்வூழியர்களுக்கு மலர்மாலைகள் அணிவித்தனர்.

தொழிற்சாலை ஊழியர் [illegible] புரிச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு [illegible] திரு. விஜயரத்தினம் தலைமை வகித்தார்.

ஆளணிமுகாமையாளர் திரு. வே சிறிஸ்கந்தராசா, சிமெந்து பொது ஊழியர் சங்கத் தலைவர் திரு நா. நடராசா ஆகியோரும் பேசினர்.

கௌரவிக்கப்பட்ட ஊழியர்களின் சார்பில் இளைப்பாறிய பூரணானந்தம்பிள்ளை தவகுலசிங்கம் ஆகியோர் நன்றி கூறினர். (ஒ-எ)

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வருகிறது

# வேட்பாளர்களின் யோசனைகள் முன் வைக்கப்பட வேண்டும்

## அஷ்ரப் பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, மே 3

ஜனாதிபதி தேர்தலை மக்கள் சந்திக்க இன்னும் சில நூறு நாட்களே உள்ளன. எனவே தேசியப் பிரச்சினையாகிவிட்ட இனப் பிரச்சினைக்கு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் தாங்கள் முன்வைக்கும் யோசனைகள் என்ன என்பதை நாட்டு மக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் மேற்கண்டவாறு பகிரங்க அழைப்பை விடுத்துள்ளார்.

அவ் வேண்டுகோளில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெரும்பான்மை சமூகங்களின் வேட்பாளர்கள் சிறுபான்மைச் சமூகங்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய ஆக்கபூர்வமான எதையாவது செய்தாக வேண்டும்.

விடுதலைப் புலிகளை அடக்கி விடலாமென்ற எண்ணத்துடன் செலவு செய்யப்படும் கோடான கோடி ரூபா பணம் அவமே பாழாவது மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் வெற்றி வாகை சூடலாம் என்ற நம்பிக்கையும் தென்படுவதாக இல்லை.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் தான் இனப்பிரச்சினை உண்டென்று பெரும்பான்மையினர் நினைத்திருந்த காலம் மலையேறிவிட்டது. அனுபவமும் அறிவின் வீச்சும் அவர்களுக்கு வேறு விதமாக கற்பித்திருக்கிறது.

இனப் பிரச்சினையின் தாக்கம் தமது வீட்டு வாசல் படிகளுக்கும் வந்துவிட்டதை சிங்கள மக்கள் இன்று உணர்கின்றனர்.

இனப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவர்களுடனும், கட்சிகளுடனும் பேச்சை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி வேட்பாளர்களை முஸ்லிம் காங்கிரஸ் கேட்கிறது. (ஒ-3)

# பத்திராதிபரின் சாரதி மீது அதிரடிப்படையினர் தாக்கு!

கொழும்புப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியரை ஏற்றிச் சென்ற காரின் சாரதியை, அந்த ஆசிரியரின் முன்னிலையிலேயே விசேட அதிரடிப் பொலீஸ் படையின் பிரதம இன்ஸ்பெக்டர் ஒருவர் தாக்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் பற்றி விசாரணை நடத்தும்படி விசேட அதிரடிப் பொலீஸ் படையின் கொமாண்டன்ற் லயனல் கருணாசேன உத்தரவிட்டுள்ளார் கொழும்பு, புதிய களனி பாலத்தடியில் வைத்து இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து அதிரடிப்படைத் தளபதி கருணாசேன கவலை தெரிவித்தார் (த-எ)

# மட்டு.கரையோர பகுதிகளில் மீண்டும் சிங்கள குடியேற்றம்

யாழ்ப்பாணம், மே 3

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் மீண்டும் திட்டமிடப்பட்ட சிங்கள மீனவக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னர் வெளியேறிய சிங்கள மீனவர்கள் தற்போது மீண்டும் அங்கு திரும்பிச் சென்று குடியேறி வருகின்றனர்.

அங்குள்ள இராணுவ முகாம்களை அண்டி அவர்கள் தமது குடியிருப்புகளை அமைத்து வருகின்றனர்.

குடியேறும் மீனவ குடும்பங்களுக்கு அரச பல வசதிகளை வழங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கல்குடா மடைவாடி கிராமத்தில் சிங்களவர்களுக்கென 28 வீடுகள் அரசினால் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

வாகரைப் பிரதேசத்தில் உள்ள மாங்கேணிப் பிரதேசத்தில் 51 மீனவர் குடும்பங்கள் தற்போது குடியமர்த்தப் பட்டுள்ளன மேலும் 99 குடும்பங்களை அங்கு குடியமர்த்த திட்டமிடப்பட்டு வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (த-5)

# நிறுத்தல் அளவை முத்திரை இடாவிட்டால நடவடிக்கை

முத்திரையிடப்படாத நிறுத்தல் அளவை உபகரணங்களுடன் வியாபாரம் மேற்கொள்ளும் யாழ் மாநகரசபை பகுதியிலுள்ள வர்த்தகர்கள், வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு பின் திடீர் பரிசோதனைகள் மூலம் இத்தகைய வர்த்தகர்கள், வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக யாழ் மாவட்ட நிறுத்தல் அளவைகள் பொறுப்பதிகாரி [illegible] தெரிவித்தார்.

இதுவரை முத்திரை [illegible] கொள்ளாத யாழ் நகர வர்த்தகர்களும் வியாபாரிகளும் வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் காலை 8 30 மணி முதல் பிற்பகல் 1-30 மணிவரை [illegible] நிறுத்தல் அளவை பகுதியில் முத்திரையிட்டுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (த- 63)

உயரதிகாரிகள் மீது குற்றச்சாட்டு:

# படையினரின் மனோபலம் வெகுவாகப் பாதிப்பாம்!

## ஹமில்டனின் கவலை இது!!

கொழும்பு, மே 3

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர பாதுகாப்புப் படையில் உள்ள உயரதிகாரிகள் விரும்பவில்லை என்றும் - யுத்தத்தினால் அவ்வதிகாரிகள் பயனடைவதாகவும் சிலர் பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றனர்.

இது படையினர் மத்தியில் குழப்பத்தையும் இராணுவத்தினர் மத்தியில் தப்பெண்ணங்களையும் உருவாக்கும் முயற்சியாகும்.

இப்படியான பேச்சுகள் தான் படையினரின் மனோபலத்தை பாதிக்கின்றன.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்ஹா முன்கண்டவாறு தெரிவித்தார்.

தொப்பூரில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவக் கப்டன் அனுருத்த பராக்கிரம விஜயவர்த்தாவின் நினைவு தின நிகழ்ச்சி ஒன்றில் பேசிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொல்லப்பட்ட கப்டன் சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திரு. என். டபிள்யு. டி. விஜயவர்த்தாவின் புதல்வர் ஆவார்.

''உயிரிழப்புகளுடனே தான் நாம் வாழ வேண்டியுள்ளது. எனது குடும்ப உறுப்பினர்கள் சிலரும் யுத்தத்தில் கொல்லப்பட்டுள்ளனர். இந்த யுத்தம் விரைவில் முடிவுக்கு வரும் என்று நான் நம்புகின்றேன்'' என்றும் ஜெனரல் வணசிங்ஹா தெரிவித்தார். (ஒ-எ)

## சுகாதார வாரம்

கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் இம் மாதம் 5 ஆம் திகதி சுகாதார வாரம் கொண்டாடப்படவுள்ளது. வித்தியாலய அதிபர் திரு. க. பொன்னையா தலைமையில் விழா நடைபெறும். (க-178)

## புலிகளின் குரல் வானொலியில்

03 - 05 - 1994

செவ்வாய் இரவு

- ★ 8 01 — ஊர்க்கற்றுப் ஒலிவாங்கி
- ★ 8-10 அறிந்து கொள்ளுங்கள் — தவறவிடாத சிறிய நிகழ்ச்சி
- ★ 8-20 — நனந்தானா — ''இரத்தச் சோகைக்குரிய காரணிகளும் அதற்கான ஆலோசனைகளும்''
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம் — ''பயம்''
- ★ 8-50 — களமும் காலமும் — ''நல்ல நேரம்''

04 - 05 - 1994

புதன் காலை

- ★ 7 02 மவீர [illegible]
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தொடர்ந்து நீங்கள் கேட்டவை

மண்ணைப் பாதுகாக்க மரங்களை நடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவணைப் பணம் செலுத்த தவறியதால்

# ஒய்வூதியம் பெற முடியாத நிலையில் விவசாயிகள்

யாழ்ப்பாணம், மே 3

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்தவர்களில் 28 யாழ். மாவட்ட விவசாயிகள் தமது தவணைப் பணத்தை தொடர்ந்து செலுத்த தவறியமையால் — தற்போது வழங்கப்படும் ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் விவசாயிகள் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டத்தில் 1988 ஆம் ஆண்டில் இணைந்த 46 யாழ். மாவட்ட விவசாயிகள் தற்போது ஓய்வூதியத்தைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் வடக்கு - கிழக்கு நிலைமையை கருத்திற்கொண்டு தொடர்ந்து தமது தவணைக் கட்டணத்தை செலுத்தத் தவறியவர்கள் — அதனைக் கட்டி முடிப்பதற்கான கால எல்லை இவ்வருடம் டிசம்பர் 31ஆம் திகதி வரை நீடித்திருப்பதாக கமத்தொழில் காப்புறுதிச் சபை அறிவித்துள்ளது.

(த-162)

## மரண அறிவித்தல்கள்

### தருமலிங்கம் தியாகலிங்கம்

தருமலிங்கம் தியாகலிங்கம் 02 - 05 - 1994 அன்று அகாலமரணமானார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நேற்று செம்மணி மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
தி. தருமலிங்கம்
(தந்தை)

44/1, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்,

(30712)

### திருமதி செல்லப்பா நாகம்மா

காங்கேசன்துறை குமாரகோயிலடியைச் சேர்ந்தவரும், சிங்கம் வீதி உடுவிலில் வசித்தவருமாகிய செல்லப்பா-நாகம்மா 02-05-1994இல் சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்லப்பாச் செட்டியாரின் அன்பு மனைவியும், சிவகுருநாதன் (மலேசியா), காலஞ்சென்ற மோகராஜா P.J.K (மலேஷியா), பத்மநாதன் (சென்றல் பினான்ஸ் கம்பனி கண்டி), சரோஜினிதேவி, தனலட்சுமி, சிறிறங்கநாயகி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-05-94) செவ்வாய்க்கிழமை காலை 8மணியளவில் மருதனார் மடம் பொது மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
ஆ. இராஜலிங்கம் (மருமகன்)

வீமன்காமம்,
தெல்லிப்பளை.

(30707)

### சோமசுந்தரம் நடராசா (சி.சோ.)

(நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கிளிநொச்சி பாரதிபுரத்தில் வசித்தவருமாகிய சோமசுந்தரம் நடராசா நேற்று முன்தினம் [ஞாயிறு] காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - கண்மணி தம்பதியின் அன்பு மகனும், தெய்வநாயகி அம்பாள் அவர்களின் அன்புக் கணவரும், சுமதி, வானதி, மாணிக்கவேந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கிளிநொச்சியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சோ. சுந்தரலிங்கம்
(மைத்துனர்)

முத்தையா...
91 A. கண்டி வீதி,
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்,

(30711)

### திருமதி மகேஸ்வரி பாக்கியநாதன்

கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற Dr. தம்பு பாக்கியநாதனின் அன்பு மனைவி திருமதி மகேஸ்வரி பாக்கியநாதன் நேற்று (02 - 05 - 94) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr. ரட்ணசிங்கத்தின் சகோதரியும், காலஞ்சென்ற லோகநாதன், ஜெகநாதன் (ஆணையாளர், மோட்டார் போக்குவரத்துப் பிரிவு, பிரதிப்பணிப்பாளர், கடற்றொழில் திணைக்களம், வட - கிழக்கு மாகாண சபை), ரட்ணேஸ்வரி (லண்டன்), விக்னேஸ்வரி, யோகேஸ்வரி, சிவநாதன் (மின் அத்தியட்சகர், இ.மி.ச - கொழும்பு), கணநாதன் (தொழில் நுட்பவியலாளர் - நீர்ப்பாசனத் திணைக்களம், யாழ்ப்பாணம்), சத்தியநாதன் (உல்லாசப் பயணத்துறை), தர்மநாதன் (கணக்காளர் கே.சி.பேர்ட் இலக்ட்ரிக்கல் கொம்பனி), Dr. ஈஸ்வரி (Dental Surgeon – கண்டி, அரச மருத்துவமனை), ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகநிதியின் வளர்ப்புத் தாயாரும், நாகேஸ்வரி (கல்வித் திணைக்களம், கொழும்பு), விக்னேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற கோபாலரட்ணம் (செயலாளர், வட - கிழக்கு மாகாண சபை), சுமனாசினி, விமலாதேவி, யோகினி நளினி, Dr. மகேந்திரா (மிருக வைத்தியர் Nestles – கண்டி) ஆகியோரின் மாமியாரும், அவந்தகுமார், திருமதி யசோதா யோகேந்திரா, திருமதி ராதா அருந்தவநாதன் சுகந்தினி, சிவகுகன், ராஜ்கண்ணா, கிந்துஜா, சியாமியா, பிருந்தா, சினாத் ஜன், சாம்பவி, வைன், சஜன் அபிமன், ஆகியோரின் பேர்த்தியாரும், ஆருத்திரனின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 04-05-94 (புதன்) காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் ... மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பா. கணநாதன்
(மகன்)

பூநாறி மரத்தடி,
43, சபாபதி வீதி,
கொக்குவில் கிழக்கு,

[30713]

# தாஜ்மஹால் தகர்க்கப்படும் இப்படி ஓர் எச்சரிக்கை

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் மாளிகையைத் தகர்க்கப் போவதாக, அதன் அருகில் உள்ள தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் அச்சுறுத்தியுள்ளார்கள் என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

தாஜ்மஹால் இருக்கும் ஆக்ரா நகரில் 212 தொழிற்சாலைகள் உள்ளன.

17 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தாஜ்மஹால் மாசடைவதில் இருந்து பாதுகாக்க வேண்டும் என்றால், 212 தொழிற்சாலைகளும் மூடப்பட வேண்டும் என்று கடந்த மாதப் புதுடில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

"இந்த உத்தரவு விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். இல்லையேல் எமது இயக்கம் வன்முறையானதாக மாறிவிடும். தாஜ்மஹாலுக்கு என்ன நடக்கும் என்பது ஒருவருக்குமே தெரியாது" — என்று தொழிற்சாலைகளின் சார்பில் எதிர்ப்பியக்கம் நடத்தி வரும் தாஜ் ... தொழில் பிரசாரக் குழுவின் பிரதிநிதி ஒருவர் எதிர்ப்புப் பேரணியில் கலந்து கொண்டு பேசுகையில் எச்சரித்தார்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் அயோத்தியில் பாப்ரி மசூதிக்குச் செய்தது போன்று தாஜ்மஹாலுக்குச் செய்ய வேண்டும் என்ற உணர்வு தான் மேலோங்கி நிற்கிறது என்று பாரதிய ஜனதா கட்சித் தலைவர்களில் ஒருவரான ரவிசுந்தர்க் தெரிவித்தார்.

1992 டிசம்பரில் அயோத்தியில் இந்து 16 ஆம் நூற்றாண்டு பழமை வாய்ந்த பாப்ரி மசூதி இடிக்கப்பட்டது.

அரசு எமது எச்சரிக்கையை புறக்கணித்தால் அந்த மாதிரியான செய்கை தான் இடம் பெறும்" — என்றும் ரவிசுந்தர்க் தெரிவித்தார்.

இந்த ஆலயம் இருந்த இடத்தில்தான் தாஜ்மஹால் கட்டப்பட்டதாக இந்து மத வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இந்து விஷ்வபரிஷ் தயாரித்துள்ள மீட்டெடுக்க வேண்டிய இந்துமத ஆலயங்களின் பட்டியலில் தாஜ்மஹாலும் இடம் பெற்றிருப்பதாகவும் ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்திருக்கிறது.

(த-எ)

## யாழ். வைத்தியசாலைகளில்

# சுத்திகரிப்பு தொழிலாளர் உடனடியாக நியமனம்

வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் 20 சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கு உடனடி நியமனம் வழங்கப்பட உள்ளது.

வைத்தியசாலைகளில் நிலவும் சுத்திகரிப்பு தொழிலாளர் பற்றாக் குறையை கருத்திற் கொண்டு முதல் கட்டமாக இவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கப்பட உள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். சண்முகதாஸ் தெரிவித்தார்.

எட்டாம் வகுப்பு சித்தியடைந்தவர்களிடமிருந்து இப்பதவிக்கான விண்ணப்பங்களை விரைவில் வடபிராந்திய சுகாதாரத் திணைக்களம் கோரவுள்ளது.

முதல் கட்டமாக நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுகின்றவர்களில் 20 பேருக்கு உடனடி நியமனம் வழங்கப்படும். இதனைத் தொடர்ந்து பிரதேச செயலர் பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களை பொறுத்து எஞ்சியோருக்கும் நியமனம் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(த-162)

# கெயர் ஸ்தாபன உதவியுடன் 5 குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 3

யாழ்ப்பாணத்தில் அண்மையில் பெய்த மழையினால் சேதமடைந்த 5 குளங்கள் கெயர் ஸ்தாபனத்தின் உதவித்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட உள்ளன.

விவசாய நடவடிக்கைகளுடன் நேரடியாக சம்பந்தப்பட்டவையும், கால போகத்தில் நெல் உற்பத்திக்கும், சிறுபோகத்தில் தானிய, மரக்கறிச் செய்கைக்கு உதவக் கூடியவையுமான குளங்கள் இதற்கென தேர்ந்தெடுக்கப்படும்.

யாழ் மாவட்ட தொண்டர் ஸ்தாபனங்களுக்கு ஊடாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒரு குளத்தை புனரமைப்பு செய்ய 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபா தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 90 ஆயிரம் ரூபாவை கெயர் ஸ்தாபனமும், மிகுதி 50 ஆயிரம் ரூபாவை வேலைகளை பொறுப்பேற்கும் தொண்டர் ஸ்தாபனம் கிரமதான அடிப்படையில் பயன்பெறும் விவசாயிகள் ஊடாக செய்து முடிக்க வேண்டும் என்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆரம்பக் கூட்டம் ஒன்று வெகு விரைவில் யாழ். அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறும். (த)

# முஸ்லிம்கள் அநீதிக்கு தலைவணங்க முடியாது

## சபாநாயகர் மூஹம்மது சொல்கிறார்

கொழும்பு, மே3

முஸ்லிம்கள் அநீதிக்குத் தலைவணங்க முடியாது என்று சபாநாயகர் எம். எச். முஹம்மது தெரிவித்திருக்கிறார்.

தமது கருத்துக்களைப் பகிரங்கமாகத் தெரிவிப்பதற்குரிய நேரம் வரவில்லை என்று கூறி அவர் —

"வேளை வரும் போது எனது கருத்துக்களைப் பகிரங்கமாகத் தெரிவிக்கத் தயங்கமாட்டேன் என்று சொன்னார்.

சிறுபான்மையினர் என்ற வகையில் "எமது உரிமைகள் எமக்கு முக்கியம். நிச்சயமற்ற தன்மை இன்றைய அரசியல் சூழ்நிலையில் காணப்படுகின்றது. முஸ்லிம்களாகிய நாம் தாச்சியில் இருந்து நெருப்பினுள் விழுந்து விடக் கூடாது" — என்றும் அவர் கூறினார்.

(த-எ)

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# நிவாரணங்கள் வழங்குவதை துரிதப்படுத்தப் பணிப்பு

கொழும்பு மே 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு, மீளக் குடியமர்கள் நிவாரணங்களைத் துரிதப்படுத்தி இவ்வாண்டு இறுதிக்குள் கொடுப்பனவுகளை வழங்கி முடிக்க வேண்டும் என்றும்—

நிர்மாண பணிகளை அங்கு துரிதப்படுத்துமாறும் புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்னா தி ... தலைமையில் மட்டக்களப்பில் நடந்த மாநாடு ஒன்றில் பணிப்புரை விடுத்தார்.

புனர்வாழ்வு நடவடிக்கைகளில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று அந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் ஒரு லட்சத்து 35 ஆயிரம் குடும்பங்களில் ஒரு லட்சத்து 6 ஆயிரம் குடும்பங்கள் வன்செயல்களால் பாதிக்கப்பட்டுள்ளன.

## இன்று

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 1 மணிக்கு கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

விளையாட்டுத் துறை ஆசிரியர்களை இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கல்விக் கோட்டப் பிரதிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்

(த-117)

## பாடசாலைகளில்

மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை இல்லமெல்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் எ. எஸ். ஏ. அலெக்ஸாண்டர் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். (த-117)

★ ★ ★

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் அதிபர் க. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

(த-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 3

றோட்டறக்ட் கழகம் 7 பேர் கொண்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் ஹொக்கி சுற்றுப் போட்டியில் இன்று மாலை யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ 4 மணி:- கிறாஸ் ஹொப்பர்ஸ் யங் அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் 'ஏ' அணி

★ 4. 30 மணி:- கிறாஸ் ஹொப்பர்ஸ் பச்சை அணி எதிர் ஷரோ வி. க அணி

(த)

★ ★ ★

யாழ். ஐங்கரன் விளையாட்டுக் கழகம், ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்திவரும் சுற்றுப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

மென் பந்து கிரிக்கெட்

★ பிற்பகல் 3 மணி:- ஸ்புட்னிக் வி. க. எதிர் சென்மேரிஸ் வி. க.

காற்பந்தாட்டம் (ஓவர்)

★ பிற்பகல் 2. 30 மணி:- கே. கே. எஸ் ஐ வி. க. எதிர் கலாஜோதி வி. க. ஏ அணி

(த)

★ ★ ★

களபூட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் இணுவிலில் உள்ள மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பொற்பதி ஐ வி. க. எதிர் வயாவை வி. க.

★ புங்குடுதீவு அம்பாள் வி. க. எதிர் விநாயகர் ஐ. வி. க.

## திருநாவுக்கரசர் குருபூசை

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயச் சூழலில் உள்ள அடியார் மடத்தில் நாளை புதன் கிழமை திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நடைபெறும். [த-155]

★ ★ ★

ஆனைக்கோட்டை இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் ஆனைக்கோட்டை ஸ்ரீ வாத விக்னேஸ்வரர் ஆலயத்தில் நாளை மாலை 5 மணிக்கு திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நடைபெறும். [த-100]

★ ★ ★

தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தில் நாளை புதன் பிற்பகல் 1. 30 மணிக்கு திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நடைபெறும்.

[த]

ஈழ தமிழ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பும் அகதிகளின் பாதுகாப்புக்கு இலங்கை அரசு உத்தரவாதம் அளிக்கும் வரை எந்த அகதிகளையும் இலங்கைக்கு அனுப்பக் கூடாது என்றும் அந்த அமைப்பு கேட்டுள்ளது

ஜெனிவாவில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் தலைமையகம் இந்த விடயம் தொடர்பாகத் தயாரித்துள்ள விசேட அறிக்கையை இலங்கை அரசுக்கும் அனுப்பியுள்ளதாகத் தெரிய வந்தது

(உ-3)

# "செப்ரிசீமியா" நாளாந்தம் ஆஸ்பத்திரியில் உயிர் காவு!

யாழ்ப்பாணம், மே 3

"செப்ரிசீமியா" வின் தாக்கம் தொடர்ந்தும் பலரின் உயிர்களைப் பலியெடுத்த வண்ணமே உள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நாளாந்தம் 'செப்ரிசீமியா' மரணங்கள் நிகழ்ந்து வருகின்றன.

மே மாதத்தின் இரண்டு நாட்களில் மட்டும் 'செப்ரிசீமியா' நான்கு பேரின் உயிர்களைக் காவு செய்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களிலும் இறந்தவர்களில் மூவர் குழந்தைகள். ஒருவர் 18 வயது இள நங்கை. இவர்கள் நால்வருமே வடமராட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மே முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை துறைமுக வீதியைச் சேர்ந்த குகன் சர்மிளா (5 மாதம்), தும்பளை நான்காம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த திருச்செல்வம் பகாமதி (18 வயது) ஆகிய இருவரும் —

மே இரண்டாம் திகதி திங்கட்கிழமை மணற்காட்டைச் சேர்ந்த எட்மன் றெஜி மேரியுமினாவும் (3 வயது), அல்வாயைச் சேர்ந்த தவமணிதேவி என்பவரின் 7நாள் ஆண் சிசுவும் - 'செப்ரிசீமியா' வுக்குப் பலியானார்கள். (அ-19)

## யாழ். வடக்கு கல்வி வலயத்தில்

# 10 உயர்தர பாடசாலைகள் இரு நேரமாக இயங்கும்

யாழ்ப்பாணம் வடக்கு கல்வி வலயம் 2 இல் உள்ள உயர்தரப் பாடசாலைகள் (1 ஏபி, 1 சி பாடசாலைகள்) யாவும் நாளை புதன்கிழமை முதல் இரு நேரமாக இயங்கும்.

இது தொடர்பான அறிவித்தலை யாழ். கல்வி வலயம் - 2 இன் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி விடுத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அதிபர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கு இணங்க இவ் அறிவித்தல் விடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். [த]

# 'தினகரன்' ஆசிரியருக்கு தரப்பட்ட தண்டனை ரத்து

சென்னை, மே 3

உரிமை மீறல் பிரச்சினை தொடர்பாக தினகரன் ஆசிரியர் முத்துப்பாண்டியனுக்கு விதிக்கப்பட்ட ஒருவார காலசிறைத் தண்டனையை தமிழக சட்டசபை நேற்று ரத்துச் செய்தது.

சட்டசபை நேற்றுக் கூடிய போது, இந்திரா காங்கிரஸ் குமரி அனந்தன் எழுந்து தாம் கொண்டு வந்த உரிமை மீறல் பிரச்சினை மீதே முத்துப்பாண்டியனுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை ரத்துச் செய்வது பற்றி சபாநாயகர் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

சட்டசபை தான் அந்தத் தண்டனையை விதித்தது என்று சபாநாயகர் தெரிவிக்க —

முதலமைச்சர் ஜெயலலிதா குறுக்கிட்டு, உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்தவரே தண்டனையை ரத்துச் செய்யக் கேட்கும் போது சட்டசபை அது குறித்து முடிவு செய்யலாம் என்று குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து தண்டனையை ரத்துச் செய்யும் பிரேரணையை அமைச்சர் நெடுஞ்செழியன் கொண்டு வந்தார். சபை அதனை ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.

[உ-எ]

## கராத்தே மணி காலமானார்

சென்னை, மே 3

கராத்தேமணி சென்னையில் நேற்று முன்தினம் காலமானார். அவருக்கு வயது 50

(உ-எ)

## சிறிமா வீடு திரும்பினார்

கொழும்பு, மே 3

கடந்த வெள்ளி கிழமை குடல் இறக்க நோய்க்காக சத்திரசிகிச்சை செய்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பினார்.

[உ-த]

## மட்டக்களப்பில் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு, மே 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சிலநாட்களாக ஸ்ரீ லங்கா பொலீஸ் அதிரடிப் படையினரின் சுற்றி வளைப்புகளும், கைது நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன.

கடந்த 25 ஆம், 26 ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்புப் பகுதியை சுற்றிவளைத்த அதிரடிப்படையினர் 75 க்கும் மேற்பட்ட தமிழ் மக்களைக் கைதுசெய்து முகாம் கொண்டு சென்றனர். கடும் சோதனையின் பின் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இதேபோன்று கடந்த 27 ஆம் திகதி கொக்கட்டிச்சோலையும், 28 ஆம் திகதி ஆரையம்பதி முதலாம் குறிச்சி செல்வநகர் ஆகிய பகுதிகளும் சுற்றி வளைக்கப்பட்டன.

## நாளை

கரவெட்டி கல்விக் கோட்டத்துக்கான கணித விஞ்ஞான வினா விடைப் போட்டி நாளை புதன்கிழமை கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்டு 6 தொடக்கம் 11வரையிலான மாணவர்களிடையே இப்போட்டி நடத்தப்படும். (க-173)

★ ★ ★

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் அறிவியற் கழக மண்டபத்தில் நாளை புதன் மாலை 4 மணிக்கு 'பூமியின் வெப்பம் அதிகரிக்கின்றதா' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இடம் பெறும்.

கருத்தரங்கில் யாழ் கல்வித் திணைக்கள விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு வை. சுந்தரலிங்கம் கருத்துரை வழங்குவார். [த]

ஐ. தே. க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச் செயலாளராக கலாநிதி காமினி விஜேசேகரா இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் அரசாங்கம் பதவியில் இருந்த போது, ஐ. தே. கவிலிருந்து ருக்மன் சேனநாயக்கா வெளியேறி இப்புதிய கட்சியை ஆரம்பித்தார்.

பிரேமதாஸா அரசின் காலத்தில் ருக்மன் சேனநாயக்கா தனது கட்சியைக் கலைத்து விட்டு மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொண்டார். (உ-எ)

நரோமா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நரோமாவில் இங்கிருந்து புறப்பட்டுச் செல்லவிருப்போரை இன்று முற்பகல் 11 மணிக்கு முன்னர் பருத்தித்துறை துறைமுகத்தில் சமூகமளிக்குமாறு யாழ் அரச அதிபர் கேட்டுள்ளார். (உ-163)

ஈழ அகதிகளை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்துள்ளது என்ற கருத்திலும் —

தற்போது சண்டை யாழ். குடாவுக்குள் மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும் —

இலங்கைத் தமிழ் அகதிகள் இனிமேலும் இலங்கையில் மனித உரிமை மீறல்களை எதிர்நோக்கவில்லை என கருதப்படுவதாலும் —

நெதர்லந்து அரசு தனது நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை அனுப்ப முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1990 க்குப் பின்னர் நெதர்லந்துக்கு வந்த இலங்கைத் தமிழர்கள் அனைவரும் பொருளாதார அகதிகள் என்று அரசு கருதுவதாகவும் நெதர்லந்து வானொலி தெரிவித்தது.

இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்ட நெதர்லந்து (டச்சு) அரசின் நீதி அமைச்சுப் பேச்சாளர், அகதிகள் அவர்களின் விருப்பத்துக்கு மாறாகப் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுவார்களா என்பது பற்றி கருத்து வெளியிட மறுத்துவிட்டார்.

(உ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் ... 03 - 05 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org